# டாக்டர் ஸாகீர் ஹுசேன் இந்திய ஜனாதிபதியாவார்

Registered as a Newspaper in Ceylon விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU [தபால்] பெட்டி எண் : 49

மலர் 9 இதழ் 60

போன் 389 National Tamil Daily தேசிய தினசரி

யாழ்ப்பாணம் பராபவ பங்குனி 28 ஜுல்ஹஜ் 30 செவ்வாய்க்கிழமை [11-4-67]

## உபஜனாதிபதி வி. வி. கிரி காங்கிரஸ் கட்சி முடிவு

புதுடில்லி, ஏப்ரல் 10

இந்திய ராஷ்டிரபதி பதவிக்கு டாக்டர் ஸகீர் ஹுஸேனையும், உப ராஷ்டிரபதி பதவிக்கு திரு. வி. வி.கிரியையும் தமது அபேட்சகர்களாகக் காங்கிரஸ் கட்சி தெரிவுசெய்துள்ளது. திரு. கிரி முன்பு இலங்கையில் இந்தியக் ஹைகமிஷனராக இருந்திருக்கிறார்.

இன்று நடைபெற்ற காங்கிரஸ் பார்லிமெண்ட் போர்டின் கூட்டத்திலேயே இவர்களிருவரது பெயர்களும் முடிவுசெய்யப்பட்டது.

டாக்டர் ஸாகிர் ஹுசேன் தற்போதைய உப ராஷ்டிரபதியாகக் கடமையாற்றுகிறார். அவரது பதவிக்காலம் மே 12ந் தேதியுடன் முடிவடைகிறது. இப்போதைய ராஷ்டிரபதியான டாக்டர் ராதாகிருஷ்ணன், தாம் ராஷ்டிரபதி பதவியில் தொடர்ந்து இருக்கப்போவதில்லையென ஏற்கனவே திட்டவட்டமாக அறிவித்துவிட்டார். எதிர்க்கட்சிகள் சுப்ரீம்கோர்ட் பிரதம நீதி

[6-ம் பக்கம் பார்க்க]

# 'ராணுவம், பொலிசிடமிருந்து மக்களைப் பாதுகாருங்கள்'

## பிரதமரைச் சந்தித்து தமிழ் எம். பி. க்கள் கோரிக்கை

கொழும்பு, திங்கள்

வல்வெட்டித்துறைச்சம்பவங்கள்பற்றி தமிழரசுக்கட்சித்தலைவர் டாக்டர் நாகநாதன் தலைமையில் எம்.பி.க்கள் சிலர் இன்றிரவு பிரதமர் திரு. டட்லிசேனநாயகாவைச் சந்தித்து உண்மை நிலைமையை எடுத்துக்கூறியதாகத் தெரிகிறது. இதுபற்றி விசாரணை செய்து தகுந்த நடவடிக்கைஎடுப்பதாகவும் இனிமேலும் இதுபோன்றசம்பவங்கள் நடைபெறாமல் நடவடிக்கைஎடுக்கப்படுமென்றும் பிரதமர் உறுதியளித்ததாகவும் அறியப்படுகிறது.

வல்வெட்டித்துறையில் சென்றசனிக்கிழமை இரவு நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோகச்சம்பவம் பற்றியும் இராணுவ பொலிஸ் தாக்குதல்பற்றியும், வல்வெட்டித்துறைக்குச்சென்று நிலைமையை நேரில்ஆராய்ந்தவர்களும் சம்பவம் நடைபெற்றபொழுது அங்கு உடனிருந்தவர்களுமான சில எம். பி.க்களும் டாக்டர் நாகநாதனுடன் பிரதமரைச் சந்திக்கச் சென்றிருந்தனர்.

இச்சந்திப்பின்போது பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சைச் சேர்ந்த அதிகாரிகள் சிலரும் சமூகமளித்திருந்ததாகத் தெரிகிறது.

வல்வெட்டித்துறையில் சென்ற சில தினங்களாக நடந்துவந்துள்ள சம்பவங்கள் பற்றியும் இராணுவ நடவடிக்கைகள் பற்றியும் பாரபட்சமற்ற பூரண விசாரணை நடத்தவேண்டுமென்றும் இனிமேலும் இதுபோன்ற சம்பவங்கள் நடைபெறாதவாறு நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமென்றும், வல்வெட்டித்துறையிலுள்ள பொதுமக்களுக்குப் பாதுகாப்பளிக்கவேண்டுமென்றும் எம். பி.க்கள் பிரதமரைக்கேட்டுக்கொண்டனர்.

## வடபகுதி பொலிஸ் அதிபர் நடவடிக்கை

பிரதமர் டட்லியின் உத்தரவைத் தொடர்ந்து பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் கேட்டுக்கொண்டதற்கிணங்க வல்வெட்டித்துறைச் சம்பவங்கள்பற்றி வடபகுதி பொலிஸ் சுப்ரின்டென்ட் திரு, ஆர். சுந்தரலிங்கம் நேற்று முன்தினம் மாலையே விரிவான அறிக்கையொன்றைப் பொலிஸ் அதிபருக்கு அனுப்பி வைத்தார். வல்வெட்டித்துறைப் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்தவர்கள் சிலரை வடபகுதிக்குள்ளேயே மாற்றமும் செய்யப்பட்டுள்ளது.

## 'ஆசிரியர் இடமாற்றத்தால் கல்வி பாதிக்கப்படுகிறது'

### கோப்பாய் எம். பி. கூறுகிறார்

கோப்பாய், திங்கள்

'நமது கல்விப்பகுதியினர் ஆசிரியர்களை இடமாற்றம் செய்வதனால் தற்போதைய கல்வித்திட்டமும், மாணவர்களது கல்வித்திறனும் மிகவும் பாதிக்கப்படுகின்றன.'

மேற்கண்டவாறு கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் கடந்த 39ஆண்டு காலமாக ஆசிரியையாகக் கடமையாற்றிஇளைப்பாறியதிருமதி எஸ். ரி. வில்லியம்ஸின் சேவைநலம்பாராட்டு விழாவில் கலந்து உரையாற்றும்போது கோப்பாய் எம். பி. திரு. சி. கதிரவேற்பிள்ளை குறிப்பிட்டார்.

மேற்படிவிழா கல்லூரிப் பழைய மாணவர் ஆசிரியர் சங்கத்தினரால் அதிபர்திரு. இ.கே.சண்முகநாதன் தலைமையில் கல்லூரி மைதானத்தில் நடத்தப்பெற்றது.

திரு. கதிரவேற்பிள்ளை மேலும் பேசுகையில், 'திரு. வில்லியம்ஸ் ஆசிரியர்களின் கடமையை உணர்ந்து, மாணவர்களது வாழ்க்கையின் அடிப்படைக்குப் பயனுள்ள கல்வியைற்கற்பித்து சேவைமனப்பான்மையுடன் தொண்டாற்றியவர்' என்றார். செல்வி ஏ. குமாரசாமியினால் பாராட்டுப்பத்திரம் வாசித்தளிக்கப்பட்டது.

திரு கே.இராஜரத்தினம். திரு.கே. எஸ். முத்துவேலு ஆகியோரும் பாராட்டுரை வழங்கினர். திரு. வீ. சோமசுந்தரம் நன்றிகூறினார்.

## பருத்தித்துறை எம. பி.க்கு பிரதமர் தந்தி

வல்வெட்டித்துறைச்சம்பவங்கள் குறித்து பூரண விசாரணை நடத்த தாம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக பிரதமர் திரு. டட்லி சேனநாயகா பருத்தித்துறை எம். பி. திரு. கே. துரைரத்தினத்துக்கு அனுப்பியுள்ள தந்தியில் தெரிவித்துள்ளார்.

## கைரேகைநிபுணர் வந்தனர்

வல்வெட்டித்துறையில் துப்பாக்கிச் சூட்டு சம்பவம் நடைபெற்ற இடத்துக்கு கொழும்பிலிருந்து நேற்று வந்த கைரேகை அடையாள நிபுணர்கள் சூட்டுச் சம்பவம் நடைபெற்ற இடங்கள் எரிக்கப்பட்ட கடைகள் மற்றும் சேதப்படுத்தப்பட்ட இடங்கள் ஆகியவற்றை பார்வையிட்டு கையடையாளம் மற்றும் விபரங்கள் சேகரித்துச் சென்றனர்.

### பொலிசார் வாபசாகினர்

இதுவரை சம்பவம் நடைபெற்ற இடங்களைக் காவல் புரிந்து வந்த பொலிசார் நேற்று காவல் புரிந்து வந்த இடங்களை விட்டு வாபசாகினர்.

## சம்பவம் நடந்த இடங்களை ஜி. ஜி. பார்வையிட்டார்

யாழ்ப்பாணம், செவ்.

வல்வெட்டித்துறையில் சென்ற சனிக்கிழமை இரவு துப்பாக்கிச்சூட்டு சம்பவம் நடைபெற்ற இடத்துக்கு யாழ்ப்பாணம் எம். பி. திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் நேற்று மாலை சென்று பார்வையிட்டார்.

வல்வெட்டித்துறை சனசமூகசேவா நிலையத்தையும் அதற்கு முன்னுள்ள இடங்களையும் இளைஞர் சிவஞானசுந்தரம் இறந்துகிடந்த இடத்தையும் அவர் பார்த்தார்.

கடைகள் வீடுகளுக்கேற்பட்ட சேதத்தையும் சம்பவத்தின் போது கடைகளிலிருந்தவர்களிடமிருந்து கேட்டறிந்தார்.

பருத்தித்துறை எம். பி. திரு. கே. துரைரத்தினம் சனசமூகசேவாநிலையத் தலைவர் திரு.எஸ். ஞானமூர்த்தி பட்டினசபைத் தலைவர் திரு. வி. இரத்தினவடிவேலு கூட்டத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிகளை விளக்கிக்கூறினர்.

திரு. பொன்னம்பலத்துடன் உடுப்பிட்டி எம். பி. திரு. எம். சிவசிதம்பரம், பருத்தித்துறை பட்டினசபைத் தலைவர் திரு. என். நடராசா ஆகியோர் சென்றிருந்தார்கள்.

திரு. ஜி. ஜி. இவற்றைப் பார்வையிட்டபின் பொதுமக்கள் மத்தியில் பேசுகையில் தாம் மேற்படி சம்பவம் பற்றி நேற்று முன்தினம் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனறலைச் சந்தித்து விஷயத்தை விளக்கிக் கூறியதாக எடுத்துக் கூறினார்.

திரு. ஜி. ஜி., காலம் சென்றவரின் தந்தையாரின் வீட்டுக்குச் சென்று அவருக்கு ஆறுதல் கூறினார்.

வேலணை மத்திய மக வித்தியாலயம் பழைய மாணவர் சங்கம்

நமது சங்க ஆண்டுப் பொதுக்கூட்டம் வரும் தமிழ்ப்புத்தாண்டு தினம் 14-4-67 மாலை 3-30 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் மன்றத்தலைவர் அதிபர் திரு. க. சிவசிதம்பரம் அவர்கள் தலைமையில் ஆரம்பமாகும். அங்கத்தவர்கள், பழைய மாணவர்கள் அனைவரையும் தவறாது சமுகம் தரும்படி வேண்டுகிறோம்.

சு. சண்முகநாதன், செயலாளர்.

1736

எதிர்வரும்

வருடப்பிறப்பை முன்னிட்டு

பல தினிசு

C. W. E. புடவைகள்

இன்று விற்பனைக்குக் கிடைத்திருக்கின்றன

287 ஸ்ரான்லி ரேட்டில் மொத்தமாகவும்

420, ஆஸ்பத்திரி வீதியில் சில்லறையாகவும்

பெற்றுக்கொள்ளலாம்

யாழ்ப்பாண ஐக்கிய வியாபாரச் சங்கம் (LTD)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

தெய்வம்எங்கும்நிறைந்துள்ளதென்ற ஞானத்தின் அடிப்படையிலே, அன்பை அஸ்திபாரமாகக் கொண்டு விளங்கும் சுபீட்சமே நீடித்திருக்க முடியும்.

—சுவாமி ராமதாஸ்


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box 49 Jaffna
Telephone: 389.

யாழ்ப்பாணம் பராபவ வருஷம் பங்குனி மீ 28உ (11-4-67)


## வியட்னும் சமாதானம்

எந்த நோக்கத்துடன் ஐ. நா. பொதுக்காரியதரிசி யு தாண்ட் இலங்கையுள்ளிட்டு ஐந்து ஆசிய நாடுகளுக்கு விஜயம் செய்கிருரோ அதே வியட்னும் சமாதான நோக்கத்துக்காக இலங்கைப் பிரதமர் டட்லி தீவிர முயற்சியை எடுத்துள்ளார். ஆகவே இருவரும் நேரில் கலந்து பேசியுள்ளதன் பயனுக. இப்போது நோக்கம் கைகூட அதிக வாய்ப்புண்டு.

யு தாண்டின் யோசனைகளை ஏற்கெனவே புதுச்சீனம் நிராகரித்துவிட்டது. அவரை அமெரிக்காவின் கையாள் என்றும் பீகிங் கூறியுள்ளது. ஆகவே அவரது சண்டை நிறுத்த யோசனைகளை புதுசீனமும் வடக்குவியட்னுமும் நிராகரித்துவிட்ட நிலையில், அவரது இத்தூது வியட்னுமில் அமைதியை ஏற்படுத்த உதவாதென்பது தெளிவு. மேலும் ஐ. நா. சபையில் புதுசீனம் இன்னும் சேர்த்துக்கொள்ளப்படாத நிலையில் ஐ. நா. காரியதரிசியின் யோசனையை புதுசீனம் தன்மானத்துடன் ஏற்குமென்று எதிர்பார்ப்பதற்குமில்லை.

ஆனல் இலங்கையின் நிலை இவ்விஷயத்திலே ஐ. நா. ஸ்தாபனத்தின் நிலையைவிட மேலானதாகும். ஆசியாவின் ஸ்விட்ஸர்லாந்தான இலங்கை ஏற்கனவே இந்தியாவுக்கும் சீனத்துக்கும் ஏற்பட்ட எல்லைச் சண்டையை நிறுத்த வெற்றிகரமாக உதவியுள்ளது. புதுசீனத்துடன் அரிசி-ரப்பர் வர்த்தக உறவுகளையும் வைத்துக்கொண்டிருக்கின்றது. வியட்னும் சண்டையிலே சம்பந்தப்பட்ட எல்லாருடனும் நல்லுறவு கொண்டுள்ளது ஆகவே இலங்கையின் யோசனையை, அமைதியை விரும்பும் யாரும் அவ்வளவு சுலபமாக நிராகரித்துவிட முடியாது.

வியட்னுப் பிரச்னையை வியட்னும் மக்களே கூடித் தீர்த்துக்கொள்ளவேண்டுமென்றும், அந்நியர் யாரும் இதில் தலையிடாமல், வடக்கு வியட்னும், தெற்கு வியட்னும், வியட்காங் இம்மூன்று பகுதியினரின் பிரதிநிதிகளும் கூடிப் பேச்சுவார்த்தை நடத்தி, சண்டையைச் சுமுகமாக முடிப்பது பற்றி ஆலோசிக்க, இலங்கை எல்லா வசதிகளையும் சந்தர்ப்பத்தையும் அளிக்கக் காத்துள்ளது என்றும் பிரதமர் டட்லி சேனநாயக்கா முன்வந்திருப்பது போற்றத்தக்கதாகும். இந்த யோசனையையும் சம்பந்தப்பட்டவரில் யாரும் எக்காரணம் பற்றியும் நிராகரிப்பதாயின் வியட்னும் போரை நிறுத்த வேறு நல்ல வழி எதுவும் பிறப்பது சந்தேகமே.

ஐ. நா. காரியதரிசி யுதாண்டின் யோசனை ஆரம்பத்திலேயே செத்துவிட்டதால், அவர் இலங்கையின் யோசனையாவது நிறைவேறத் தமது பூரண செல்வாக்கையும் பயன்படுத்துவாரென்று எதிர்பார்ப்பது மிகையல்ல. குண்டுவீச்சை நிறுத்தவேண்டுமென்று அமெரிக்காவை நிபந்தனை எதுவும் கேட்காமல் சம்பந்தப்பட்ட வியட்னுமியப் பிரதிநிதிகள் முதலில் கூடிப்பேச முடியுமாயின், பல தப்பெண்ணங்கள் தீரவும் வாய்ப்பிருக்கும். அமெரிக்கா, சீனம் போன்ற வெளி வல்லரசுகள் தலையிட்டுள்ளதால் தான் வியட்னும் நிலைமை அதிக சிக்கலாகியுள்ளது. வியட்னும் வீடுதான் பற்றி எரிவதால், அந்த நெருப்பை அணைத்து தங்கள் மக்களைக் காக்கவேண்டுமென்ற ஆர்வம் அவர்களுக்கு இயற்கையாக இருக்கவேண்டும். இலங்கையில் பூர்வாங்க மகாநாடு கூடியுத்த நிறுத்தத்துக்கான ஒரு பொதுத் தீர்மானம் செய்ய முடியுமாயின் அதை நிறைவேற்றிவைக்க ஐ. நா. சபைக் காரியதரிசி தமது பூரண செல்வாக்கையும் பயன்படுத்தலாம். வியட்னும் இருட்டில் [illegible] தெரியும் ஒரே [illegible] ஒளி இது ஒன்றுதான்.

வல்வெட்டித்துறையில் அனுபவித்ததை ,நமது நிருபா' எழுதுகிருர்

# "சூட், சூட் என்ற குரல்; உடன் துப்பாக்கி வேட்டு" புரியாத பாஷையில் ஏதோ சொல்லி இராணுவத்தினர் அடித்தனர்

**கடந்த 8-4-67-ல் வல்வெட்டித்துறை சனசமூக நிலைய முன்றலில் மாலை நடைபெற்ற கூட்டத்துக்கு செய்தி எடுக்கப்போன நமது நிருபர் பழனிப் பிள்ளை, கூட்டத்தை தொடர்ந்து நடந்த சம்பவங்களின்போது நேரில் பார்த்தவற்றை எழுதுகிருர்.**

வல்வெட்டித்துறை சனசமூக முன்றலில் பொலிஸாரின் வன்முறைச் செயல்களைக் கண்டித்தும் ஆட்சேபித்தும் 8-4-67 மாலை திரு. ஞானமூர்த்தி தலைமையில் கூட்டமொன்று நடைபெற்றுக் கொண்டிருந்தது. பேச்சாளர்கள் தொடர்ந்து பேசிக்கொண்டிருந்தார்கள்.

இரவு மணி 8 இருக்கும். பேச்சுகளை குறிப்பு எடுத்துக்கொண்டிருந்தேன். அப்போது திடீரென்று 'ஐயோ, ஐயோ' என்ற ஓலம் கேட்டது. கூட்டத்தைப் பார்த்தேன். பொலிசார் கூட்டத்திலிருந்தவர்களைத் தாக்கிக்கொண்டிருப்பதைக் கண்டேன். கூட்டம் அங்குமிங்குமாக கலைந்து சிதறியது. மேடைக்கு பொலிசார் வந்தனர். உடனே நான் சனசமூக நிலையத்திற்குள் ஓடினேன். பின்னர், இன்ஸ்பெக்டர் பத்திராண மேடை அருகில் வந்தார். பருத்தித்துறை எம். பி. திரு. கே. துரைரத்தினம் இன்ஸ்பெக்டரோடு கதைத்துக் கொண்டிருக்க, நானும் பட்டினசபைத் தலைவரும் சன சமூக நிலையத் தலைவர் ஞானமூர்த்தியும் இன்ஸ்பெக்டருக்கு அருகாமையில் நின்ருேம். அப்போது இராணுவத்தினரும் பொலிசாரும் கடைகள், பைசிக்கில்களை அடித்து உடைப்பதைப் பார்த்தேன்.

### காலால் உதைத்தனர்

அவ்வேளையில் இராணுத்தினர் எங்களுக்கு அருகே வந்து சிங்களத்தில் ஏதோ சொல்லிச் சொல்லி எங்களை அடித்தார்கள். நான் எனது கையில் வைத்திருந்த செய்தி எடுக்கும் குறிப்புப் புத்தகத்தையும் பவுண்டன் பேனவையும் ஒருஇராணுவ சிப்பாய் பறித்துவிட்டு கையால் எனது நெஞ்சில் குத்த வேருெரு சிப்பாய் பொல்லால் எனது வலது பக்க கையில் அடித்தார், காலால் உதைத்தார் நான் அதையும் வாங்கிக்கொண்டு சனசமூக நிலையத்திற்குள் ஓடினேன். என்னுடன் சன சமூக நிலையத்துக்குள் பருத்தித்துறை எம. பி. பட்டின சபைத் தலைவர், நிலையத் தலைவர் மற்றும் ஐந்துபேர் நின்ருேம். பொலிசார் எங்களை அறையில் இருந்து கொள்ள வேண்டுமென்றும், வெளியில் தலைகாட்டினுல் 'என்ன நடக்குமென்று பாருங்கள்' என்ருர்கள். அப்போது துப்பாக்கிகள் வெடிக்கும் சத்தம் கேட்டது. ஏறக்குறைய 18 வெடிச்சத்தம்வரை கேட்டது நான் இருந்த அறைக் கதவின் இடைவெளிமூலம் இடையிடையே வெளியில் நடப்பதைப் பார்த்தேன்.

நான் இருந்த இடத்திலிருந்துகொண்டே சில சம்பவங்களைப் பார்க்கக் கூடியதாகவிருந்தது. எதிரே இருக்கும் கடையின் முன்புறத்தில் வெடிச்சத்தம் கேட்டதைத் தொடர்ந்து கடையைப்பார்த்தேன்.

### சூட், சூட் என்ற சத்தம

பல வேளைகளில் 'சூட், சூட்' என்ற சத்தம் கேட்டுக் கொண்டே இருந்தது. நிலையத்திற்குள் இருந்தபோது இராணுவ சிப்பாய் ஒருவர் எம். பி.யைப் பார்த்து, 'நீதானு எம். பி.'? என்று படுமோசமான வார்த்தைகளால் பேசியும் அவருடன் மற்றவர்களையும் பார்த்து 'கையில் வைத்திருக்கும் பொல்லு உங்களுக்குத்தான்' என்று அரைகுறைத் தமிழில் பேசினுர்.

### இரத்தக்காயங்களுடன் இன்ஸ்பெக்டர்

இச்சமயம் இன்ஸ்பெக்டர் பத்திராண இரத்தக்காயத்துடன் அவ்விடத்திற்கு வந்தார். அவரை சில பொலிசார் நிலையத்திற்குள் கூட்டிக் கொண்டு வந்தனர். நான் அவர் அருகில்சென்று அனுதாபம் தெரிவித்தேன். சிறிது நேரத்தால் சார்ஜண்ட் இராஜரத்தினம் உடலில் இரத்தம் சித்தசிந்த, கண்ணை மூடிக்கொண்டு வந்தார். அவரை பொலிஸார் வாங்கிலில் படுக்கவைத்து, [illegible] சனசமூக நிலைய அறையின் ஜன்னல் மெதுவாகத் திறக்கப்பட்டது. நான் ஜன்னலூடாகப் பார்த்தேன். சுமார் 40க்கு மேற்பட்ட இளைஞர்கள் உள் இருந்தார்கள். அறையோ அங்கு அடைபட்டிருக்கும் இளைஞர்களுக்குச் சுவாசிப்பதற்குப் போதாததாகும். அதன் பின்னர் காங்கேசன்துறை உதவிப் பொலிஸ் சுப்ரின்டன் திரு. டபிள்யூ. லியனகே ஒரு பொலிஸ் கோஷ்டியுடன் அவ்விடம் வந்தார். வந்து பொலிசாருடன் கதைத்துக் காயப்பட்டவர்களை ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தார். அதன்பின் பருத்தித்துறை எம். பி. துரைரத்தினத்தோடு கதைத்தார். அவர் வந்த பின்னர் எங்களை வெளியில் விடுவாரென நினைத்தேன். அவர் விடமுடியாதெனக் கூறினுர்.

### உடுப்பிட்டி எம. பி. வந்தார்

எந்த நேரத்தில் என்ன நடக்குமோ என்று உள்ளூரப் பயம்தான். அறையில் இராணுவத்தினரும் பொலிசாரும் எந்நேரம் எங்களைத் தாக்குவார்களோ என்ற அச்சம். இரவு 10-20 மணி இருக்கும் உடுப்பிட்டி எம். பி. திரு. எம். சிவசிதம்பரமும், பருத்தித்துறை நகர சபைத் தலைவர் திரு. என். நடராசாவும் நாமிருந்த இடத்திற்கு வந்தார்கள்.

[6-ம் பக்கம் பார்க்க]

ஆசிரியருக்குக் கடிதம்

### பிரதிநிதி அல்ல

29-3-67-ல் வெளியான 'ஈழநாடு' பத்திரிகையில் வடமாகாண அதிபர்கூட்டிய ஆலயப்பிரவேச மகாநாட்டில் மட்டுவில் வாசி திரு. ஏ. கே. இராமலிங்கம் கதிரிப்பாய் ஸ்ரீ சுப்பிரமணிய ஆலயப்பிரதிநிதியென கலந்துகொண்டதாக வெளிவந்திருந்தது. ஆலய நிர்வாகசபையும் ஊரவர்களும் அவர் அவ்வாலயப்பிரதிநிதி என்பதை மறுக்கிருேம்.

வே. இராசரத்தினம்,
காரியதரிசி.
ஸ்ரீ சுப்பிரமணிய ஆலயம்,
கதிரிப்பாய்,
அச்சுவேலி.

[5-ம்கலத் தொடர்ச்சி]

பண்ணிடைத் தமிழொப்பாய் பழத்தினிற் சுவையொப்பாய்,
கண்ணிடை மணியொப்பாய் கடுவிருட் சுடரொப்பாய்,
மண்ணிடை யடியார்கள் மனத்திடர் வாராமே,
விண்ணிடைக் குருகாவூர் வெள்ளடை நீயன்றே.

—சுந்தரமூர்த்தி சுவாமிகள்

[திருக்குருகாவூர் வெள்ளடைக்கோயிலில் எழுந்தருளியிருப்பவனே, பரவெளியின்கண் உள்ளநீ, இம் மண்ணுலகில் வாழும் அடியவர்களது மனதின்கண் யாதொரு துன்பமும் தோன்ருதவாறு, பண்ணின்கண் இனிமையைப்போன்றும் பழத்தின்கண் சுவையைப் போன்றும், கண்ணின்கண் மணியைப் போன்றும், மிக்க இருளின்கண் விளக்கைப்போன்றும் நிற்கின்ருயன்ரே!]

## ஐயாறன் [illegible]

நேற்று நகர மண்டபத்தில் நடந்த ஒரு கத்தோலிக்க விவாக வரவேற்புக் கூட்டத்திற்குச் சென்றிருந்தேன். தூரத்தில்வரும்போதே, இனிமையான நாதசுரம் இசைத்துக்கொண்டிருந்தது. இக்காலத்தில் இங்கு நடக்கும் தமிழ்விவாகங்கள் பலவற்றில், டப்பா சங்கீதத்தை இசைத்தட்டுகள் மூலம் அதிகாலை முதல் நடுஇரவுவரை ஒலிபெருக்கி, பக்கத்தில் வசிப்பவர்களின் பிராணனை வாங்கும் கண்ருவியை, தடுக்க முடியாமல் சகிக்க வேண்டியுள்ளது. இதற்கு மாருக இக்கல்யாணத்திலே மங்களகரமான மேளவாத்தியம் முழங்கி, அக்சூழ்நிலையெல்லாம் தமிழ் மணம் பரப்பியது,

இரு குத்துவிளக்குகள், பூரண கும்பம், சந்தனப் பேலா, பன்னீர்ச்செம்பு எல்லாம் அழகாக வைத்திருந்தனர். வந்திருந்த பெண்மணிகளில் அநேகமாக எல்லோரும் கத்தோலிக்கரே என்ருலும், நெற்றியில்லட்சணமாக குங்குமப்பொட்டு வைத்து, தலையில்பூச்சூடி. காஞ்சீபுரம் முதலிய வண்ணப் புடவைகளை உடுத்து அமர்ந்திருந்தகாட்சி, அசல் இந்துக்கள்வீட்டுக் சல்யாணம் போலவே இருந்தது.

இதைப்பற்றி பக்கத்திலிருந்த ஒரு கத்தோலிக்கஅன்பரை விசாரித்தேன். மார்க்கத்தால் வேறுபட்டிருப்பினும், தமிழ்ப்பண்பைத் தாங்கள் கைவிடவில்லையென்றும், நல்லநாள் பார்த்தே விவாகம் முதலியவற்றிற்கும் ஒழுங்கு செய்வதாகவும் சொன்னுர். சமயம் மாறுவதால் தமிழ்ப் பண்பையும் அடியோடு கைவிட வேண்டுமென்றும் ஒரு காலத்தில் கெடுபிடி இருந்தது. அது இப்போது பெரிதும் மாறி, தமிழ்ப்பண்பு சிறந்து விளங்குவதைக் காணப் பெருமகிழ்ச்சியாக இருந்தது.

ஃ ஃ ஃ

வல்வெட்டித்துறைச் சம்பவங்களைப்பற்றித்தான் இப்போது ஊரெல்லாம்பேச்சு. அன்று இரவே, பொலிஸ் அதிபர் யாழ்ப்பாணத்திலிருந்து அங்கு சென்று இராணுவத்தினரை எல்லாம் தங்கள் முகாம்களுக்குள் செல்லும்படி செய்ததுடன், அங்கிருந்த பொலிஸ் படையினரையும் அடியோடு வேறிடத்துக்கு அகற்றி, புதிய பொலிஸ்காரர்களை அங்கு அமர்த்தியுள்ளதாக அறிந்தேன். சபாஷ்! பொலிஸ் படையிலே பொறுப்புள்ளவர்கள் பலர் இருந்தும், ஒருசில புல்லுருவிகளின் விஷமத்தால், பொலிசுக்கே கெட்ட பெயரேற்படுவதுடன், பொதுமக்களுக்கும் சொல்ல முடியாத தீங்கு ஏற்படுகின்றது. இங்கு பொதுமக்களின் பூரண நம்பிக்கையையும் அபிமானத்தையும் பெற்றுள்ளனர், அரசாங்க அதிபரும், பொலிஸ் அதிபரும். இவ்விருவரும் கூறும் யோசனைகளின்படி நடப்பின், மீண்டும் இங்கு இவ்வித கண்ருவிகள் ஏற்படாமல் தடுக்கலாம். கலகம் பிறந்தால் நியாயம் பிறக்குமென்று கூறுவதுண்டு. வல்வெட்டித்துறையிலே இப்போது ஒரு வாலிபர் உயிர்த்தியாகம் செய்துள்ளார். இதன் பயனுக, இப்பகுதியிலிருந்து இராணுவக் கொடுமை நீங்குமாயின் இதுவும் ஒரு நன்மைக்கே என்று கொள்ளலாம்.

[4-ம் கலம் பார்க்க]

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# 'ராஷ்டிரபதி பதவிக்கு போட்டியிட மாட்டேன்'

# டாக்டர் ராதாகிருஷ்ணன் அறிவிப்பு

புதுடில்லி, ஏப்ரல் 10

**இந்திய ராஷ்டிரபதி பதவிக்குப் போட்டியிடுவதில்லை என்று தற்போதைய ராஷ்டிரபதியும், உலகப் புகழ்பெற்ற தத்துவஞானியுமான டாக்டர் ராதாகிருஷ்ணன் இங்கு தெரிவித்துள்ளார்.**

ராஷ்டிரபதி பதவிக்கான போட்டியில் தாம் இறங்குவதில்லையென்ற தமது முன்னைய முடிவை, அப்போட்டி சம்பந்தமான சமீபத்திய நிகழ்ச்சிகள் மேலும் வலியுறுத்தியுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். இந்நிகழ்ச்சிகள் தமக்கு மிகுந்த அதிருப்தியை ஏற்படுத்தியிருப்பதாக அவர் கூறியுள்ளார்.

நாட்டில் பொதுத்தேர்தல்கள் முடிவடைந்த பின்னரும், பல ராஜ்யங்களில் கூட்டு அரசாங்கங்கள் ஏற்பட்ட பிறகும், பல அரசியல் கட்சித்தலைவர்கள் தம்மைப் பதவியில் தொடர்ந்து இருக்குமாறு வலியுறுத்தி இருந்ததாகக் கூறிய டாக்டர் ராதாகிருஷ்ணன், அர்வகள் தமது இக்கட்டான நிலையை உணருவார்களெனத் தாம் நம்புவதாகத் தெரிவித்தார்.

### சுப்பாராவ் இணக்கம்

இதற்கிடையில், ராஷ்டிரபதி பதவிக்கு நிற்க, எதிர்க்கட்சிகள் தெரிவுசெய்துள்ள பிரதம சுப்ரீம்கோர்ட் நீதிபதியான திரு. கோக்கா சுப்பாராவ், தமது இணக்கத்தைத் தெரிவித்துள்ளதாக சுதந்திராக் கட்சித் தலைவர் திரு. மஸானி அறிவித்திருக்கிறார்.

---

## "புத்தபிரானின் போதனையே உலகசமாதானத்துக்கு வழி"

### யு தாண்ட் கருத்து

கொழும்பு, திங்கள்

'உலக சமாதானத்தை நிறுவ, புத்தபெருமானின் போதனையே சிறந்தவழி' என்று ஐ. நா. பொதுக் காரியதரிசி யுதாண்ட், கண்டியில் தமக்கு அளிக்கப்பட்ட வரவேற்புக்குப் பதிலளித்துப்பேசுகையில் கூறினார்.

நேற்றுக்காலை இலங்கைப் பிரதமர் திரு. டட்லி சேனநாயக்காவுடன் பொதுவான சர்வதேசப் பிரச்னைகள் பற்றியும், குறிப்பாக வியட்னும் பற்றியும் யு தாண்ட் சுமார் ஒருமணிநேரமாகப் பேச்சுவார்த்தைகள் நடத்தினார்.

நண்பகலுக்குப்பின், அவர் கண்டிக்குச் சென்று, அங்குள்ள தலதமாளிகைக்கு விஜயம் செய்து தரிசித்தார். வணக்கத்துக்குரிய மல்வத்த அஸ்திரிய மதபீடக் குருக்கள் யு தாண்டுக்கு வரவேற்புரை வாசித்தளித்தார்.

அவ்வரவேற்புரையில், உலக சமாதானத்துக்கு ஐ. நா. நிறுவனத்தையே உலக நாடுகள் நோக்குவதாகவும், வியட்னுமில் சமாதானம் நிறுவ யு தாண்ட் எடுத்து வரும் முயற்சிகளைத்தாம் வெகுவாகப்பாராட்டுவதாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது.

அதற்குப் பதிலளித்துப் பேசுகையில், உலகத்தில் சமாதானத்தை நிலை நிறுத்துவதற்குச் சிறந்த வழி புத்தபெருமானின் போதனைகளைப் பின்பற்றுவதேயாகுமென்றும், அவ்விதமே தாம் தமது சொந்த வாழ்க்கையில் நடந்து வருவதாகவும் யு தாண்ட் தெரிவித்தார்.

---

## அமெரிக்க துருப்புகள் வெளியேறவேண்டும

### வடவியட்னும் பிரதமர் வலியுறுத்தல்

சைகோன், ஏப்ரல் 10

வடவியட்னுமில் சமாதானம் ஏற்படுவதாயின், வியட்னுமிலிருந்து அமெரிக்க துருப்புகள் உடனடியாக வெளியேறவேண்டுமென்றும், முன்நிபந்தனை எதுவுமின்றி வடவியட்னும் மீதான குண்டுவீச்சை நிறுத்தவேண்டுமென்றும் வடவியட்னும் பிரதமர், பத்திரிகையொன்றுக்கு அளித்த பேட்டியொன்றில், மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

### ஹனேய் மறுப்பு

இருதினங்களுக்குமுன் தென்வியட்னுமில் வியட்காங்கியர் நடாத்திய கடும் தாக்குதலின்போது, இராணுவ விலக்கப் பிராந்தியத்தைக்கடந்தனரென்று தென்வியட்னும் பிரதமர் கூறிய குற்றச்சாட்டை ஹனேய் ரேடியோ மறுத்துள்ளது.

---

ஹம்ப்ரியின்

## ஐரோப்பிய விஜயம முடிவடைந்தது

பிரசல்ஸ். ஏப்.10

அமெரிக்க ஜனதிபதி திரு. ஹியூபேர்ட் ஹம்ப்ரி, இன்று இங்கிருந்துவாஷிங்டன்புறப்பட்டார். இன்றுடன் அவரது ஒருவார ஐரோப்பிய விஜயம் முடிவடைந்தது. இன்றும், நேற்றுப்போல், அவருக்கெதிராக ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன. 50 பெல்ஜியர் கைதுசெய்யப்பட்டனர். திரு. ஹம்ப்ரி பாரிஸ், லண்டன், பேர்லின் ஆகிய தலைநகரங்களுக்கும் சென்றிருந்தார்.

---

## பஸ் விபத்தில் 4 பேர் பலி

புதுடில்லி, ஏப்ரல் 10

பம்பாய்—பூனு பஸ்சாலையில் ஏற்பட்ட விபத்தொன்றில், பஸ்சில்சென்றுகொண்டிருந்த பிரயாணிகளில் 4 பேர் இறந்தனர். 11 பேருக்குக் காயம் ஏற்பட்டது. 60 பிரயாணிகளைக் கொண்ட இந்த பஸ், மைசூரிலிருந்து திரும்பிக்கொண்டிருந்த ஒரு யாத்திரிகர் பஸ்ஸாகும்.

---

## பர்மா அரிசி பெற ஏற்பாடு

### இந்திய உணவு மந்திரி தகவல்

புதுடில்லி, ஏப். 10

பர்மாவிலிருந்து அரிசி பெறுவது பற்றிய ஒரு நீண்டகால ஏற்பாட்டைத் தாம் பரிசீலனை செய்துவருதாக மத்திய உணவு மந்திரி திரு. ஜகஜ்ஜீவன் ராம் கூறியுள்ளார். பர்மாவிடம் அரிசிபெறுவதுபற்றி, புதுடில்லியில் நேற்று நடைபெற்ற முதல்மந்திரிகள்மகாநாட்டில் ஆலோசனைகள் தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்தே உணவுமந்திரி இவ்வாறு தெரிவித்துள்துள்ளார்.

---

## இலங்கை - இந்திய ஒப்பந்தம

### மல்வத்த தேரோ எதிர்ப்பு

கொழும்பு, திங்கள்

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை அதன் தற்போதைய உருவில் அமுல் செய்ய வேண்டாமென வணக்கத்துக்குரியமல்வத்தபீடாதிபதி அமுனுகம ராஜகுரு ஸ்ரீவிபாசி, பிரதமர் திரு. டட்லி சேனநாயக்காவைக் கேட்டுள்ளார்.

இக் கோரிக்கை அடங்கிய தனது கடிதத்தின் பிரதிகளை அவர், 'நாம் சிங்களவர்' இயக்கத்தை வழி நடத்தும் பார்லிமெண்ட் அங்கத்தவர்களுக்கு அனுப்பி வைத்துள்ளார்.

சிறிமாவோ - சாஸ்திரி ஒப்பந்தம் சிங்கள மக்களுககு குறிப்பிடத்தக்க ஒருவெற்றி என்று கூறும் மல்வத்த தேரோ, இப்போது பார்லிமெண்டில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் நகல் மசோதாவின் தயாரிப்பில், இந்திய, தமிழரசு எம். பி.க்களின் உதவியை அரசாங்கம் பெற்றுள்ளது என்பதை நாடு முழுவதும் அறியுமெனவும் குறிப்பிட்டுள்ளார்.

சிங்கள மக்களின் விருப்பங்கள் முழுமையாகவும், பூரணமாகவும் உறுதிப்படுத்தப்படும்வரை நகல் மசோதா மீதான எந்த விவாதத்தையும் தள்ளிப்போடுமாறு அவர் அரசாங்கத்தைக்கோரியுள்ளார்.

---

## கல்விச் சபை

ஊர்காவற்றுறை, திங்

கல்வி அபிவிருத்தியை நோக்கமாகக்கொண்ட கல்விச்சபை ஒன்று நாரந்தனை கிராமசபை எல்லைக்குள் நிறுவப்பட்டுள்ளது.

இதன் பூர்வாங்க அமைப்புக்கூட்டம் கரம்பன் சண்முகநாத வித்தியாலயத்தில் கிராமசபை அங்கத்தவர் திரு. சு. பொன்னுச்சாமி தலைமையில் நடைபெற்றது.

கல்விச் சபையின் நோக்கங்களையும் ஆற்றவேண்டிய பணிகளையும் குறித்து ஆலோசனைகள் கூறப்பட்டதைத் தொடர்ந்து புதிய நிர்வாகிகள் தெரிவு நடைபெற்றது.

அட்வகேட் திரு. பொன். இரகுபதி தலைவராகவும், பண்டிதர் திரு. சு. சிவசம்பு, நெராத்தாரிஸ் திரு. சி. [illegible] ஆகியோர் [illegible] தெரிவுசெய்யப்பட்டனர்.

---

## சீன அதிபர் லியு ஷா ஷி விரைவில் பதவி நீக்கம்?

மாஸ்கோ, ஏப்ரல் 10

**இன்னும்சில தினங்களில் சீன ஜனதிபதி லியு-ஷா-ஷீயும்; காரியதரிசி இங் ஷியா பிங்கும் பதவியிலிருந்து நீக்கப்படுவார்களென எதிர்பார்க்கப்படுவதாக மாஸ்கோ வானெலி அறிவித்துள்ளது.**

சீன அதிபர் லியு-ஷா-ஷீக்கெதிராக, கடந்தசிலதினங்களாக பல்லாயிரக்கணக்கான மாணவர்களும், மக்களும் பீகிங் நகரில் ஆர்ப்பாட்டங்கள் நடாத்தி வருவது வாசகர்களுக்குத்தெரிந்ததே

அத்துடன் அண்மையில் நடைபெற்ற சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியல் கமிட்டியின் கூட்டமொன்றில். மா-ஸே-துங் ஆதரவாளர்களுக்கும் லியு-ஷா-ஷீ ஆதரவாளர்களுக்குமிடையே பலத்த கொள்கை விவாதம் நடந்ததாகவும், ஈற்றில்வாக்கெடுப்புக்கு விடப்பட்டபோது, லியு-ஷா-ஷீகுழுவினர்தோற்கடிக்கப்பட்டதாகவும்பீகிங்கிலிருந்து வரும் செய்திகள் கூறுகின்றன.

---

## இலங்கைக்கு போலந்தின் ரூ. 25 லட்சம் யந்திரங்கள்

கொட்டாஞ்சேனை, திங்.

போலாந்திடமிருந்து 25 லட்சம் ரூபா பெறுமதியான யந்திரவகைகளை இறக்குமதி செய்வதற்கான ஒப்பந்தம் ஒன்றில் நேற்று இங்கு இரு நாட்டு பிரதிநிதிகளும்கைச்சாத்திட்டார்கள்.

இத்திட்டத்தின்கீழ் இலங்கைக்கு போலந்து அனுப்பும் 25லட்சம் ரூபா பெறுமதியான யந்திர வகைகளுக்கு பதிலாக இலங்கையில் உற்பத்திசெய்யப்படும்பொருள்களை பண்டமாற்ருக போலந்து பெற்றுக்கொள்ளும். இதில் முக்கியமாக தேயிலை, றப்பர் என்பன அடங்கும்.

இறக்குமதி செய்யப்படும் யந்திரங்களில் முக்கியமானவைகளாக ரேட்டு சமப்படுத்தும்யந்திரம், மேடுசமர்படுத்தும்யந்திரம், காடுதுப்புரவுசெய்யம்யந்திரம் என்பன அடங்கும்.

---

## இவர்களின் கதி என்ன?

உடுப்பிட்டி, திங்கள்

பிறருக்குச் சொந்தமான காணிகளில் குடியிருந்துபின்னர் அக்காணிகளின் சொந்தக்காரர்களினுல் அக்காணிகளிலிருந்து வெளியேற்றப்பட்டு இருக்க இடமின்றி அநாதரவானநிலையில் அரசாங்கக் காணிகளில் தஞ்சம் புகுந்த 25 ஏழைக்குடும்பங்களை அரசாங்கமும்அக்காணிகளிலிருந்து அப்புறப்படுத்திவிட்டது.

இப்பரிதாப கதிக்குள்ளானவர்கள் கரணவாய் தெற்கிலுள்ள சிறுபான்மை வகுப்பைச்சேர்ந்த ஏழைக் குடும்பங்களேயாவர். சில தினங்கட்குமுன்னர் சொந்தத்தில் காணிநிலமற்று இருக்கஇடமில்லாது அவதியுற்ற 25 ஏழைக் குடும்பங்கள் மாண்டன. குடியேற்றத்திட்டத்துக்கு அருகாமையிலுள்ள முடிக்குரிய காணிகளில் கொட்டில்கள் அமைத்துக்குடியேறினர்.

அரசாங்கக் காணிகளில் உத்தரவின்றிக் குடியேறியமையினுல் கரணவாய் தெற்கு கிராமசேவகர் பொலிஸாரின் உதவியுடன் அரசாங்கக்காணிகளில் கட்டப்பட்டிருந்த கொட்டில்களை அப்புறப்படுத்தினுர். ஆனுல், மீண்டும் அக்காணிகளில் குடிசைகள் அமைக்கப்பட்டுள்ளதாகவும், அக்காணிகளில் குடியேறியவர்கள்தங்கட்கு அக்காணிகளைப் பகிர்ந்து தருமாறு கோரியுள்ளதாகவும்தெரியவருகிறது.

இது சம்பந்தமாகவடமராட்சி காரியாதிகாரி பரிசீலனை செய்துவருவதாகவும் அறியப்படுகிறது.

---

## குடும்பமே கொலை

எகலியகொட, திங்கள்

ஒரு தகப்பன், தாய், எட்டு வயதுமகள் ஆகிய மூவரடங்கியகுடும்பமொன்று எகலியகொடவிலுள்ள பிசோதோலா என்னுமிடத்தில் வைத்து இனந்தெரியாதநபரொருவரால் சென்ற சனிக்கிழமை இரவு கொல்லப்பட்டுள்ளது. இவர்கள் ஈவிரக்கமின்றி குத்திக் கொல்லப்பட்டனர்.

இறந்தவர்கள் சைமன் பெரேரா[40], அவரது மனைவி விமலாவதி[30]இவர்களின்மகள்மாலினிஆவர்.

எகலியகொட பொலிசார் கொலைகாரனைக் கண்டுபிடிப்பதில் தீவிரமாக இறங்கியுள்ளனர். பார்வைக்குஅழகான விமலாவதியிடம் ஆசை கொண்டு தோல்வியடைந்த ஒருவரே அக்கொலைகளைச் செய்திருக்கலாமென நம்பப்படுகிறது.

---

## இளம் மனைவியை காணவில்லையாம்

### பொலிஸில் புகார்

முல்லைத்தீவு, திங்கள்

ஆண் வேஷம் தரித்திருந்த 20 வயதான இளம் மனைவியைக் காணவில்லையென அவரது கணவன் பொலிஸில் புகார்செய்துள்ளார். அப்பெண் தன்னைத் தேடவேண்டாமென ஒரு குறிப்பு எழுதி வைத்திருந்தாரென்றும் பொலிஸ் புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மனைவி சாரம் உடுத்து, ஷேர்ட் அணிந்து தலைப்பாகை கட்டி ஆண்வேஷம் போட்டிருந்தார் என்றும் இரவு 8 மணியளவில் தேடிப்பார்த்தபோது அவரைக் காணவில்லையென்றும் இதனைத் தொடர்ந்து அவரது கணவன் பொலிஸில் புகார் செய்திருப்பதாகவும் கூறப்படுகிறது.

இப்பெண்ணைத் தேடுவதில் பொதுமக்களின் ஒத்துழைப்புடன் பொலிஸார் முயற்சிசெய்து வருகின்றனர். இதுபற்றி சகல பொலிஸ் நிலையங்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

---

## காரைநகரில் ஒருவைத்தியசாலை

யாழ்ப்பாணம், செவ்.

காரைநகரில் ஒரு வைத்தியசாலை நிறுவுவதற்கு காரைநகர் பொதுநல சேவைச்சங்கம் முயற்சி செய்து வருகிறது. இந்த வைத்தியசாலை நிறுவுவதற்கு பல பிரமுகர்கள் பண உதவியளிக்க முன்வந்துள்ளனர். இவ்விஷயமாக ஒரு உபகமிட்டி தெரிவு செய்யப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

சினிமா விமர்சனம்

# இரு வல்லவர்கள்

கணேஷ்

தமிழ் படங்கள் முன் போலில்லாது பழைய நடையை விட்டு இப்போது விறுவிறுப்பில் முன்னேற்ற மடைந்துள்ளது என்பதற்கு 'இரு வல்லவர்கள்' ஓர் அத்தாட்சி!

கதையில் அதிக புதுமைக் கலப்பு இல்லாதிருந்த போதும் நல்ல திருப்பங்கள் ரசிகர்களின் உற்சாகத்தைத் தட்டி எழுப்புகின்றன.

பிரதம நடிகர் எல்லா இடத்திலும் வெற்றி பெற வேண்டும் என்ற தமிழ் திரைப்பட [தலை] விதியை மாற்றியமைத்த 'இரு வல்லவர்கள்' டைரக்டருக்கு பாராட்டுத் தெரிவித்தேயாகவேண்டும்.

பிரதம பாத்திரமேற்று வரும் ஜெயசங்கர் தமிழ் திரை உலகுக்குக் கிடைத்துள்ள நல்ல நடிகர். வாட்டசாட்டமான உடலமைப்பும் வல்லமை மிக்க அவரது 'ஸ்டன்ட்' வேலைகளும் வில்லங்கமில்லாத 'றியல்' நடிப்பும் 'இரு வல்லவர்கள்' படத்துக்கு நல்ல வலுவூட்டுகின்றன. மனோகருக்கு வழக்கமான வில்லன் பாத்திரம். காலில் சூடு பட்டு நடிக்கும் போது அவரது நடிப்பின் அனுபவம் நன்கு தெரிகிறது. அசோகன் இடையிடையே வருகிறார்.

ஜெயசங்கரின் காதலியாக வரும் எல். விஜயலட்சுமி பாம்புபோல் நெழிந்து நடனமாடுகிறார். ஆங்கில நடனங்களுக்கு அவரது உடல் நன்கு வளைந்து கொடுக்கிறது. காதல் காட்சிகளில் ஆங்கிலப் படங்களுக்கும் தமிழ் படங்களுக்குமிடையிலுள்ள இடைவெளி இப்போது குறைந்து வருகிறது என்பதை நினைவூட்டுகிறார்.

தங்கவேலு, மனோரமா, கருணாநிதி ஆகியோரின் நகைச் சுவை சிரிக்க வைக்கத் தவறவில்லை.

கொலை நடந்தது எவ்விதம் என்பதை விளக்கும் கட்டத்தில் மிக அருமையாக நடித்திருக்கிறார் பேபி சசிகலா. அவருக்கு நல்லதொரு எதிர்காலம் காத்திருக்கிறது என்பதில் சந்தேகமில்லை.

நேரம் போவது தெரியாமல் நன்கு பொழுதைப் போக்க ஏற்ற படம் 'இரு வல்லவர்கள்' யாழ்ப்பாணம வெலிங்டன் தியேட்டரில் இப்போது திரையிடப் பட்டுள்ளது இப்படம்.

## வைத்தியசாலை நிறுவ கோரிக்கை

சுழிபுரம், திங்கள்

நவீன படுக்கை வசதிகள் கொண்ட ஓர் ஆயுள்வேத வைத்தியசாலையை வழக்கம்பரை அம்மன்கோவிலுக்கு முன்பாக இருக்கும் முடிக்குரியகாணியில் கட்டித்தரும்படி சுழிபுரம் கிராமசபையினர் கோரியுள்ளனர். கிராம சபைத்தலைவர் திரு. சு. கந்தசுவாமி ஜே. பி. தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் இதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. தீர்மானத்தின் பிரதிகள் சுகாதார அமைச்சர் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இலாகாத்தலைவர்கள் ஆகியோருக்கு அனுப்பிவைக்கப்பட்டன.

## தொலைபேசித் தொடர்பு

கோப்பாய், ஞாயிறு

கோப்பாய் வடக்கு உப தபாற் கந்தோருக்கு கோப்பாய் எம். பியின் முயற்சியின் பயனாக தொலைபேசித் தொடர்பை ஏற்படுத்த தபால் தந்திப் பகுதியினர் ஏற்பாடு செய்து வருகின்றனர் எதிர் வரும் புத்தாண்டு தினத்தில் இப்புதிய தொடர்பு ஆரம்பித்து வைக்கப்படும்.

## புதிய பஸ்சேவை

கிளிநொச்சி, திங்கள்

பரந்தன்- புதுக்குடியிருப்பு பஸ்சேவை நேற்றுத்தொடக்கம் ஆரம்பமாகியுள்ளது. புதுக்குடியிருப்பிலிருந்து பரந்தனுக்கு காலை 6-00 9-00மணிக்கும் மாலை 5-00 மணிக்கும் பரந்தனிலிருந்து புதுக்குடியிருப்பிற்கு காலை 7-15, மாலை3-15 இரவு8-20 மணிக்கும்சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

## புதிய நியமனம

சுழிபுரம், திங்கள்

சுழிபுரத்தைச் சேர்ந்த திரு. கா. அரிச்சந்திரன் வலிகாமம் மேற்குக் காரியாதிகாரி பிரிவுக்கு உடற்பயிற்சி போதனாசிரியராக அடுத்தமாதம் நியமனம் செய்யப்படுவார்.

சுழிபுரம், திங்கள்

மூளாய் கிராம உணவு உற்பத்திக் குழுவாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர் தலைவர் திரு. ஆ முருகேசு. காரியதரிசி திரு எ. விசுவலிங்கம். நிர்வாக சபை உறுப்பினர் திருவாளர்கள் வி. முருகேசபிள்ளை, இ. தம்பையா ஜே. பி, பொ. தர்மபாலன்.

## வியட்னாமில கடும்மோதல 130 பேர் கொலை

சைகோன், ஏப். 10

வியட்காங்கியருக்கும், அமெரிக்கத் துருப்புகளுக்குமிடையே ஏற்பட்டமோதல்களில், 100 வியட்காங்கியர் கொல்லப்பட்டனர். 30 அமெரிக்கர் உயிரிழந்தனர்.

## 100செங்காவலர் கொல்லப்பட்டனர்

லாசா, ஏப்ரல் 10

லாசாவில் 100 செங்காவலர் சுட்டுக் கொல்லப்பட்டதாகவும், 200 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும், அறிவிக்கப்பட்டுள்ளது. திபேத்தில்உள்ள சீன இராணுவத் தளபதி, மாசேதுங் எதிர்ப்பாளர் எனத் தெரிகிறது.

## தங்கப பதககம

புதுடில்லி, ஏப்ரல் 10

அணுசக்தி என்ஜினியரிங், விஞ்ஞானம் ஆகிய துறைகளில் காலஞ்சென்ற டாக்டர் பாபாஆற்றிய சேவைக்கென பாரத இயந்திர என்ஜினியரிங் சங்கம், தங்கப்பதக்கம் பரிசாக அளித்துள்ளது.




# டிஸ்பிரின்

## வலியிலிருந்தும் காய்ச்சற் குணத்திலிருந்தும் நம்பிக்கையான துரித நிவாரணமளிக்கிறது.

டிஸ்பிரினை நம்பிக்கையுடன் உட்கொள்ளுங்கள். அது உங்களுக்கு உடனடி நிவாரணம் தரும்.




விரிவான ஆராய்ச்சிகள் செய்து விசேஷ சேர்வம்சங்கள் கொண்டதாக தனி முறையில் தயாரிக்கப்பட்டது - டிஸ்பிரின். இதனால் தான் டிஸ்பிரின் விரைவாய் இரத்தோட்டத்தில் சேர்ந்து உடன் நிவாரணமளிக்கிறது.

தலைவலி, காய்ச்சற் குணம், உடல் வலி, பல்வலி, மாதவிடாய் முதலியன தரும் வேதனையிலிருந்து விடுபட, டிஸ்பிரின் உட்கொள்ளுங்கள்,

உலகெங்குமுள்ள டாக்டர்கள் நம்பிக்கையுடன் சிபார்சு செய்வது டிஸ்பிரின்.

டிஸ்பிரினை உட்கொள்ளுதல் சுலபம். அதைத் தண்ணீரிற் கரைத்துக் குடிக்கலாம், அல்லது வில்லையாகவே விழுங்கி விடலாம்.

றெக்கிற் அன் கோல்மன் தயாரிப்பு

J.W.T. R.C.

புத்தாண்டை புனிதமுடன்

கொண்டாட

உங்களுக்குத் தேவையான

எல்லா விதமான

ஜவுளி வகைகளும்

றெடிமேட் உடுப்புகளும்

கண்கவர் கலர்களில்

பலவித ரகங்களில்

ரெர்லின் சேட்வகைகளும்

பெற்று மகிழ

இன்றே விஜயஞ்செய்யுங்கள்!

# ராஜ்கோபால்ஸ்

36/1, பெரியகடை — யாழ்ப்பாணம்

போன்: 7168


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிங்கள ஊழியர் நியமனம்

உடுப்பிட்டி, திங்கள்

கரவெட்டி தபாற்கந்தோருக்கு முதல்முறையாக சிங்கள ஊழியர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். பொல்காவலையைச் சேர்ந்த திரு. ஏ. டபிள்யூ. அமரசிங்கா என்னும் சிங்கள ஊழியர் கரவெட்டி தபாற்கந்தோருக்கு உப-தபால் அதிபராகப் பயிற்சி முடிந்தபின்னர் இம்மாதம் முதல் நியமனம் பெற்றுள்ளார்.


7-4-67 முதல்

ஈஸ்வரன்

[கிளிநொச்சி]

தினசரி 6-30, 9-30

எஸ்.எஸ்.ஆர்.-விஜயகுமாரி நடித்த

ஆனந்தி 1727

ராஜா RAJAH

யாழ்ப்பாணம் JAFFNA

தினசரி 2-30, 6-30, 9-45

போயாதினங்களில் 4காட்சிகள்

எஸ்.எஸ்.ஆர்-விஜயகுமாரி நடித்த

ஆனந்தி

நியூ காலிங்கன்

[இணுவில்]

தினசரி 6-30, 9-30 மணி

விடுமுறைதினங்களில் 2-30

சிவாஜி— சரோஜாதேவி நடித்த

பாலும் பழமும்

இப்பொழுது திரையிடப்படுகிறது

மனோஹரா

[யாழ்ப்பாணம்]

6-30, 9-30மணி. போயா தினங்களிலும் விடுமுறை நாட்களிலும் 4 காட்சிகள்

எம்.கே.ராதா-புஷ்பவல்லி நடித்த

சம்சாரம்

புத்தம் புதிய கொப்பி

REGAL - JAFFNA

Steve McQueen

James Garner

in

THE GREAT ESCAPE

Time: 4-15, 7-00, 9-45 p. m.


## விலைப் பட்டியல் இல்லை

### ரூ. 500 அபராதம்

யாழ்ப்பாணம், திங்கள்

விலைக்கட்டுப்பாட்டுப் பட்டியலின்றி வியாபாரம் செய்ததென்ற குற்றச்சாட்டின் பேரில் கிளிநொச்சியைச் சேர்ந்த வர்த்தக ஸ்தாபனமொன்றின் உரிமையாளரான ஏ. சின்னத்தம்பி என்பவரை ரூபா 500 செலுத்துமாறு கிளிநொச்சி மாஜிஸ்டிரேட் திரு. விக்னராசா தீர்ப்பளித்தார். இவ்வழக்கை யாழ்ப்பாணம் உணவுக்கட்டுப்பாட்டிலாகாவினர். தாக்கல் செய்திருந்தனர்

விலைக்கட்டுப்பாட்டுப் பட்டியலின்றி வியாபாரம் செய்ததாக மேலும் மல்லாகத்தைச் சேர்ந்த எஸ். யோகலிங்கம் என்பவருக்கு 50 ரூபாவும், மயிலிட்டியைச் சேர்ந்த என். பொன்னையா என்பவருக்கு 50 ரூபாவும், உரும்பிராயைச் சேர்ந்த வி. முத்துக்குமாரு என்பவருக்கு 150 ரூபாவும், சுளிபுரத்தைச் சேர்ந்த கே. நல்லதம்பி என்பவருக்கு 50 ரூபாவும், அச்சுவேலியைச் சேர்ந்த கந்தசாமி என்பவருக்கு 50 ரூபாவும், காங்கேசன்துறையைச் சேர்ந்த கே. குணசிங்கம் என்பவருக்கு 125 ரூபாவும், குப்பிளானைச் சேர்ந்த சின்னத்தம்பி என்பவருக்கு 100 ரூபாவும், புன்னாலைக் கட்டுவனைச் சேர்ந்த ரி. சபாரத்தினம் என்பவருக்கு 75 ரூபாவும் குற்றம் செலுத்துமாறு மல்லாகம் மாஜிஸ்டிரேட் திரு. நிற்சிங்கா உத்தரவிட்டுள்ளார். [ந நி]

## ஓடாத பஸ்கள்

முல்லைத்தீவு, திங்கள்

முல்லைத்தீவு டிப்போவில் உள்ள இ. போ. ச. பஸ் வண்டிகளில் பெரும்பாலனவை பாதையில் ஓடமுடியாத நிலையில் இருப்பதால். உள்ளூர் சேவைகள் அடிக்கடி துண்டிக்கப்பட்டு வருகிறன.

இதுபற்றி வவனியா எம். பி. திரு. தா. சிவசிதம்பரம் மேலதிகாரிகளுடன் தொடர்பு கொண்ட பொழுது விரைவில் புதிய பஸ் வண்டிகளை அனுப்புவதாகத் தெரிவிக்கப்பட்டது. ஆனால் இதுவரை பஸ் வண்டிகள் வந்து சேரவில்லை.

## 'தமிழில் எழுதுங்கள்'

யாழ்ப்பாணம், செவ்.

சகல நடவடிக்கைகளையும் தமிழில் செய்யும்படியும், ஒப்பந்தங்களையும் தமிழில் பூர்த்திசெய்யும்படியும் ஆவரங்கால் பயிர்ச்செய்கைகுழு செயலாளர் திரு.க சின்னத்துரை, பயிர்ச்செய்கைக் குழுக்கள் சங்கங்களின் நிர்வாகிகளுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அரசாக்கம் சட்டமூலம் தமிழ் மொழி நிர்வாகத்தை ஏற்றுள்ள தென்றும் திறைசேரிசுற்றறிக்கை 686மூலம் இதனை வெளியிட்டுள்ளதென்றும், நடைமுறையில் தமிழ் பொதுமக்களுக்குவழி காட்டவேண்டிய அரசாங்க அதிகாரிகளில்சிலர் செய்யும் சதி நடவடிக்கைகளை முறியடிக்கும்படியும் அவர் கேட்டுள்ளார்.

வேலைத்திட்ட விபரங்களை தமிழிலேயே கேட்டுப்பெற்றுக் கொள்ளும்படியும்தயங்காமல் எல்லாவற்றையும் தமிழில் செய்யமுன்வரும்படியும் தெரிவித்துள்ளார்.

## ராம நவமி விழா

கொழும்பு, திங்கள்

ஸ்ரீ ராமநவமிவிழா, பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் இம்மாதம் 15-ம் திகதி ஆரம்பமாகும். இவ்விழா 3 நாட்களுக்குத் தொடர்ந்து நடைபெறும்.

ஸ்ரீ ராமகான சபாவின் ஆதரவில் நடைபெறும் இவ்விழாவின் முதல்நாள் ஸ்ரீ ராமகானசபைத் தலைவர் ஸ்ரீ எஸ். ஹரிஹரஐயர் பிரதமவிருந்தினராகக் கலந்துகொள்வார்.

16-ம் திகதி நடைபெறும் விழாவில் இராமகிருஷ்ண மிஷன் தலைவர் சுவாமி பிரேமாத்மானந்தஜி மகராஜ் பிரதமவிருந்தினராகக் கலந்து கொள்வார். 17-ம் திகதி நடைபெறும் விழாவில் நீதியரசர் டாக்டர் எச். டபிள்யு. தம்பையா கியூ. ஸி. பிரதமவிருந்தினராகக் கலந்து கொள்வார்.

## வங்கிக் கிளை இடம் மாறும்

உடுப்பிட்டி, திங்கள்

பருத்தித்துறை புலோலியில் தற்போது அமைந்திருக்கும் வடமராட்சி ஐக்கிய மாகாண வங்கிக்கிளை வெகு விரைவில் நெல்லியடிக்கு இடமாற்றம் செய்யப்படலாமெனத்தெரியவருகிறது.

## தமிழ் காங்கிரஸ் கிளை ஆண்டுவிழா

யாழ்ப்பாணம் செவ்

தமிழ் காங்கிரஸ் கட்சியின் கந்தர் மடக்கிளையின் இரண்டாவது ஆண்டுவிழா இன்று மேற்படி கிளைக்காரியாலயத்தில் நடைபெறவிருக்கின்றது .இராசவாசல்முதலியார் திரு.எஸ்.வல்லிபுரம் தலைமையில் நடைபெறவிருக்கும் விழாவில் திருவாளர்கள் ஜி.ஜி பொன்னம்பலம் எம். பி, எம். சிவசிதம்பரம் எம்,பி. ஆகியோர் உட்பட இன்னும் பலர் கலந்து கொள்ளவிருக்கிறார்கள். [ந.நி]

## புத்தாண்டு அபிஷேகம

புன்னாலைக்கட்டுவன். திங்

புத்தாண்டு பிறக்கும் நேரம் புன்னாலைக்கட்டுவன் ஆயாக்கடவை சித்திவிநாயகர் ஆலயத்தில் மூர்த்தி சங்கு அபிஷேகம் நடைபெறும்.

யாழ்ப்பாணத்தில் உள்ள பல தவில், நாதசுரவித்துவான்கள் அச்சமயம் சேவித்து வழக்கம்போலக் கை விசேடம் வாங்கிச் செல்வர்.

மேற்படி கந்தபுராணப் [illegible] டைத்தது.

உதைபந்தாட்டம்

## அன்ரனிஸ் வெற்றி

யாழ்ப்பாணம், செவ்வாய்

யாழ் உதைபந்தாட்டச் சங்கத்தினரால் நடாத்தப்பட்டு வரும் 'லீக் போட்டியில்' குருநகர் யுனைட்டட்டும் பாசையூர் சென். அன்ரனிசும் மோதிக் கொண்டனர். இடைவேளையின் முன் சென் அன்ரனிஸ் கோஷ்டி வலது முன்னணி வீரர் முதலாவது கோலைப் போட்டார் இடைவேளையின் போது சென். அன்ரனிஸ் கோஷ்டியே ஒரு கோலைப் போட்டிருந்தது இடைவேளையின் பின்சென் அன்ரனிஸ்கோஷ்டி மேலும் இரு கோல்களைப் போட்டு 3-0 கோல்களால் குருநகர் யுனைட்டட்டை தோற்கடித்தது. சென். அன்ரனிஸ் கோஷ்டியின் மத்திய பின்னணிவீரர் மரியநாயகமும் கோல்காப்பு வீரரும் ரசிகர்களின் பாராட்டுதல்களைப் பெற்றனர்.

இப் போட்டிக்கு திரு. கிருஷ்ணன் மத்தியஸ்தம் வகித்தார்.

## விவசாய அபிவிருத்தி திட்டம

புன்னாலைக்கட்டுவன், திங்கள்

புன்னாலைக்கட்டுவன் பகுதியிலும்அயல்கிராமங்களிலும் கற்களை அகற்றி நன்செய் நிலங்களாக்கும் திட்டமொன்றை வலிகாமம் வடக்குகாரியாதிகாரி திரு டி.முருகேசம்பிள்ளை மேற்கொண்டுள்ளார். இதற்காக நவீன இயந்திரங்கள் தரப்படுமென்றும் இந்நிலங்களில் கிணறுவெட்ட முற்பணம் கொடுக்கப் படுமென்றும், இவற்றில் முக்கியமா கமிளகாய், கொத்தமல்லி ஆகிய பயிர்கள் பெருமளவுக்குப் பயிரிடப்படுமென்றும் தெரிகிறது.

## ஆலயத்தை திறந்து விடுக

ஊர்காவற்றுறை, சனி,

பிரசித்தி பெற்ற புங்குடுதீவு கண்ணகி அம்பாள் ஆலயத்தைசிறுபான்மைத் தமிழ் மக்களுக்குத் திறந்து விடுமாறு புங்குடுதீவு பாரதி சனசமூக நிலையத்தினர் ஆலய பஞ்சாயத்தைக் கேட்டுக் கொண்டுள்ளனர். இவ்வாலயத்தின் வருடாந்த உற்சவம் இம்மாதம் 15-ந்திகதி ஆரம்பிக்கப்படவிருக்கிறது,

## தமிழ்ப்பத்திரம் இல்லை திருமபிச் சென்றார்கள்

யாழ்ப்பாணம், செவ்வாய்

வடமாகாண கமத்தொழில் சேவை ஆணையாளர் காரியாலயத்தில் ஒப்பந்தப் படிவங்கள் பெறச் சென்றவர்கள் தமிழ் படிவங்கள் வழங்கப்படாததால் ஒப்பந்தம் எழுதாமலே திரும்பி சென்றனர். சிங்கள, ஆங்கில படிவங்கள் வழங்கப்பட்டபோது அவற்றை ஏற்க மறுத்து விட்டனர்.

ஆவரங்கால் பயிர்ச் செய்கைக்குழு காரியதரிசி திரு.க. சின்னத்துரை, புத்தூர்-கிழக்கு பயிர்ச் செய்கைக்குழு காரியதரிசி திரு. சே.தேவராஜா மற்றும் பலர் தமிழ்ப் பத்திரம் கிடைக்காததால் ஒப்பந்தம் எழுதாமலே சென்று விட்டனர்.

அங்குள்ள உத்தியோகத்தரிடம் தமிழ்ப் பத்திரம் தரும்படி கேட்ட பொழுது தமிழில் பத்திரமில்லையென்றும், விருப்பமானால் சிங்கள ஆங்கில பத்திரத்தில் நிரப்பித் தரும்படி அந்த உத்தியோகத்தார் கூறினாராம்.

இவ் விஷயமாக யாழ்ப்பாண அரசாங்க அதிபர், தமிழரசுக் கட்சித் தலைவர் திரு.எஸ்.ஜே.வி. செல்வநாயகம், பண்டிதர் க.பொ.இரத்தினம், திரு.எஸ். கதிரவேலுப்பிள்ளை ஆகியோருக்கு புகார் செய்யப்பட்டுள்ளது.


## வரி விளம்பரம்

### வைத்தியம

தொய்வு, கசம், நீரிழிவு, கிரந்தி முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனும். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். சித்த டாக்டர் பரிபூரணானந்தர், J. P., கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்


## 'சுயதேவையை பூர்த்திசெய்யவேண்டும்

அளவெட்டி, திங்

நாம் அடிமையாக இருந்த காலத்தில் நமது நாட்டு அபிவிருத்தி தடைப்பட்டு எதற்கும் பிறநாட்டை எதிர்பார்த்து வாழ்ந்தோம். இன்று சுதந்திர இலங்கையில் ஒவ்வொரு சுதந்திர இலங்கையனும் நாட்டின் சுய தேவையைப் பூர்த்தி செய்ய முன் வரவேண்டும்'' என்று சுகாதார போதனாசிரியர் திரு.க. பாலசுப்பிரமணியம் வீமன்காமன் ஆங்கில பாடசாலையில் திருமதி.க. ஆறுமுகதாசன் தலைமையில்நடைபெற்ற உணவு உற்பத்தி சுகாதார பிரசாரக் கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

## கலைவிழா

''ஊர்காவற்றுறை, திங்கள்.

நயினாதீவில்இம்மாதம் 16-17ம்திகதிகளில் கலைவிழா நடைபெற ஏற்பாடாகியுள்ளது. நயினாதிவு மணிபல்லவ கலாமன்றம்இதனை நடத்துகிறது.

## சர்க்கரைதட்டுப்பாடு

இமையாணன், திங்.

சர்க்கரைக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இமையாணன், நெல்லியடி. பருத்தித்துறை போன்றபலஇடங்களில் ஒருகடையிலேனும், மருந்துக்குக் கூட சர்க்கரை எடுககமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

## கூப்பன் யாருடையது?

யாழ்ப்பாணம், செவ்.

கூப்பன் ஒன்று திரு. ஏ. கே. அழகசுந்தரம் என்பவரால் கண்டெடுக்கப்பட்டு, ஈழநாடு காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் பெற்றுக் கொள்ளலாம்.





3-வது வெற்றி வாரம்

கெப்பிட்டல் [கொழும்பு] பிளாஸா [வெள்ளவத்தை] நவா [கொம்பனித்தெரு]

வெம்பிளி [கண்டி] மொடேன் [பதுளை] நியூசினிமா [குருனாகலை]

விஜயா [மட்டக்களப்பு] ஸ்ரீகிருஷ்ணா [திருமலை]

வெலிங்டன் [யாழ்ப்பாணம்]

சோதனைச் சுழலிலே சோதரர் இருவர்!

வேதனை விழிம்பிலே மாதர்கள் இருவர்!!

ஆண்டவனுக்கு சவால் விட்டான் ஒருவன்!

அண்ணனையே தடுமாறவைத்தான் ஒருவன்!!

கள்வனைக் காதலித்தாள் ஒருவள்!!

ஜெய்சங்கர் — எல். விஜயலக்ஷ்மி

மனோகர், அசோகன், வசந்தா,

தங்கவேலு, மனோரமா, கருணாநிதி

மற்றும் பலர் நடிக்கும்

இரு வல்லவர்கள்


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# 'சிங்களம் படித்தாலும் உத்தியோகம் கிடையாது'

## கிளிநொச்சி எம. பி. எச்சரிக்கை

கிளிநொச்சி, திங். "சிங்களம் படித்து விட்டால் உத்தியோகம் கிடைத்து விடுமென்று நம்பி ஏமாந்து விடாதீர்கள். சிங்கள இளைஞர்கள் எத்தனையோ பேர் படித்து, பட்டம் பெற்றும் வேலையில்லாதிருக்கும் போது, நாம் சிங்களம் படித்தவுடன் வேலை கிடைத்துவிடுமே?" என்று கிளிநொச்சி எம். பி. பண்டிதர் திரு. கா. பொ. இரத்தினம் எச்சரித்தார்

கிளிநொச்சி 'றெட்ரிகோ' மைதானத்தில் நேற்றிரவு நடைபெற்ற அரசாங்க எழுது வினைஞர் சங்கத்தின் தமிழியக்க பிரசாரக் கூட்டத்தில் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு சொன்னார்.

பண்டிதர் இரத்தினம் மேலும் பேசுகையில் கூறியதாவது:

பொருளாதாரப் பிரச்னை தீர்க்கப்பட்டால், மொழிப் பிரச்னை தானகவே தீர்ந்து விடுமென்று இடது சாரியினர் கூறுகின்றனர். ஆனல் கனடா தேசத்தில் பொருளாதாரப் பிரச்னை சிறிதளவு கூடஇல்லாதிருந்தும் மொழிப் பிரச்னை அங்கு தாண்டவமாடத்தான் செய்கிறது.

அரசாங்கத்துடன் நாம் ஆங்கில மொழியில் தொடர்பு கொணடால் சிங்களத்தில்தான் பதில் வரும். ஆங்கிலத்திலேயே பதில் அனுப்ப வேண்டுமென்று சட்டம் கிடையாது. ஆனல் தமிழ் மொழியில் தொடர்பு கொண்டால், தமிழிலேயே பதில் அனுப்ப வேண்டுமென்ற நியதி உண்டு. ஆகையால், சகலரும் தமிழ் மொழியிலேயே அரசாங்கத்துடன் தொடர்பு கொண்டு, தமிழ்மொழி விசேஷ சட்டத்தை அமுல்படுத்த உதவ வேண்டும். மற்றும் பலரும் பேசினர்.

## சங்கீத உபந்யாசம்

கோப்பாய், திங்கள் நீர்வேலி க்கந்தசாமி கோவில் மஹோற்சவத்தை முன்னிட்டு தேவஸ்தான மண்டபத்தில் தினமும்இரவு 9மணிமுதல் 11மணிவரை நல்லைஞானசம்பந்தர் ஆதீன அதிபர் தவத்திரு சுவாமிநாதத்தம்பிரான் சுவாமிகளின் சங்கீத உபந்யாசங்கள்நடைபெறும். இன்று தெய்வநீதி என்னும் பொருள்பற்றி உரைநிகழ்த்துகிருர்.

## இலவச கண் சிகிச்சை

உடுப்பிட்டி, திங். வடமராட்சிப் பகுதியைச் சேர்ந்த கண் நோயாளருக்குச் சென்ற புதன்கிழமை வடமராட்சி காரியாதிகாரி கந்தோரில் இலவச கண் வைத்திய சிகிச்சை அளிக்கப்பட்டது. டாக்டர் ஆனந்தராசாவினல் பரீட்சார்த்தமாக அளிக்கப்பட்ட இவ் இலவச கண்சிகிச்சையில் சுமார் 150 க்கு மேற்பட்ட நோயாளிகள் பரிசோதனை செய்யப்பட்டனர். இவர்களில் 30 வயதுக்குட் பட்டவர்களும், பெண்களுமே அதிகமாகக் காணப்பட்டனர்.

வடமராட்சி காரியாதிகாரி திரு. கே. ஏ. ஸி. விசுவநாதன், பருத்தித்துறைப் பகுதி கிராமநல அதிகாரி திரு. கே. என். நவரத்தினம் ஆகியோரின் முயற்சியின் பயனகவே இலவச கண் சிகிச்சை நிலையம் இங்கு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

## கூட்டுப் பிரார்த்தனை சபை

ஊர்காவற்றுறை, திங்கள் இளைஞர்களைச்சமயவாழ்க்கையில் ஈடுபடுத்தும் நோக்கம்கொண்ட கூட்டுப்பிரார்த்தனைச்சபையொன்று சரவணை பள்ளம்புலம் முருகமூர்த்திகோவிலில் ஆரம்பிக்கப்பட்டது.

இருபத்துஐந்து வயதிற்குட்பட்ட இளைஞர்களைக் கொண்ட கூட்டுப்பிரார்த்தனைச்சபையின் அமைப்புக் கூட்டம்நடைபெற்றது.

பின்வருபவர்கள் சபையின் நிர்வாகிகளாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: செல்வன் வே, இராசலிங்கம், காரியதரிசி: செல்வன் செ. கந்தசாமி, தனதிகாரி: செல்வன் வே. சிவசுப்பிரமணியம்.

## சூட், சூட்என்ற...

[2-ம் பக்கத்தொடர்ச்சி]

அப்போதுதான் எனக்கும் மற்றும் அவ்விடத்திலுள்ளவர்களுக்கும் பயம் சற்றுத் தெளிந்தது. அவர்கள் இருவரும் நடந்த சம்பவங்களை பருத்தித்துறை எம். பி. மூலம் கேட்டறிந்தனர். அதன்பின்னர் இருவரும் எம். பி. துரைரத்தினத்தையும் வெளியில் அழைத்துச் சென்றார்கள்.

### எம. பி. தேறுதல் சொன்னர்

வெளியே சென்று திரும்பி வந்த எம். பி. துரைரத்தினம் எங்களுக்கு ஆறுதல் வார்த்தைகளால் தேறுதல் சொல்லிக் கொண்டிருந்தார் நள்ளிரவு 12 மணியளவில் சனசமூகநிலைய அறைக்குள் பூட்டிக் கொண்டிருந்தவர்கள் வெளியில் வந்தனர். அவர்கள் வரும்பொழுது அநேகர் களைத்து நடக்க முடியாமல் வந்தனர். காரணம் 8 மணி தொடக்கம் 12 மணிவரை காற்று இல்லா அறையில் அடைபட்டு இருந்தமையே!

பின்னர் அவ்விடத்திற்கு சாவகச்சேரி எம். பி. வி. என். நவரத்தினம், செனட்டர் நடராசா, உடுவில் எம். பி. வி. தர்மலிங்கம், கோப்பாய் எம். பி. எஸ். கதிரவேலுப்பிள்ளை ஆகியோர் வந்துசேர்ந்தனர். பொலிஸ் சார்பில் வடமாகாண பொலிஸ் அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கம், உதவிப் பொலிஸ் சுப்பிறிண்டென் திரு. தவராசா ஆகியோர் வந்திருப்பதைப் பார்த்தேன். எங்களுடன் இருந்த இளைஞர் யாவரையும் வீட்டிற்குப் போகும்படி பொலிசார் உத்தரவிட்டு, எங்களை அங்கே நிற்கும்படி உத்தரவிட்டார். இளைஞர்கள் வீட்டிற்குப்போகும்போது இரவு 12-30 மணி இருக்கும். சில மணி நேரத்தின் பின்னர் பருத்தித்துறை எம். பி., பட்டினசபைத் தலைவர், சனசமூகநிலையத் தலைவர், அதைத் தொடர்ந்து நான் மற்றும் இருவர் பொலிசாருக்கு முறைப்பாடு கொடுத்தோம். முறைப்பாடு கொடுத்த பின்னர் இரவு 2-45 மணியளவில் எங்களை வெளியே செல்ல அனுமதித்தார்கள்.

வியட்னும பிரச்னை

# பிரதமர் யோசனைக்கு யுதாண்ட் வரவேற்பு

கொழும்பு, திங்கள் ஐ. நா. பொதுக்காரியதரிசி யுதாண்ட் இன்றுதமது இலங்கை விஜயத்தை முடித்துக்கொண்டு இந்தியாவுக்குப் புறப்படுகையில் வியட்னும் தகராறுகளைத் தீர்ப்பதற்கு இலங்கைப் பிரதமர் தெரிவித்துள்ள யோசனைகள் உறுதியானவையாக இருப்பதாக விமானநிலையத்தில் நிருபர்களிடம் கூறினர்.

வியட்னும் தகராறுகளை அந்நாடுகளே தீர்த்துக் கொள்ளவேண்டும் என்ற இலங்கைப் பிரதமரின் கருத்து பற்றி அவர் குறிப்பிடுகையில் பிரச்னையைத் தீர்ப்பதற்கு இதுதான் சரியான வழி என்றர்.

யுதாண்ட் இன்று இந்தியாவுக்குப் புறப்பட்டுச் சென்ருர்.

யுதாண்டின் இலங்கை விஜயம் சம்பந்தமாக இன்று பாதுகாப்பு வெளிவிவகார இலாகா விடுத்த ஒரு அறிக்கையில் வியட்னும் மக்கள் தங்கள் பிரச்சினைகளை வெளியார் தலையீடு இல்லாமல் தாங்களே பேசித் தீர்த்துக் கொள்ள வேண்டுமென்று பிரதமர் கருத்து வெளியிட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தப் பேச்சுவார்த்தைகளுக்கு அவசியமெனில் இலங்கையிலேயே ஏற்பாடுசெய்யமுடியும் என்றும் அவர் தெரிவித்திருப்பதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# மத்திய-ராஜ்ய அரசாங்கதொடர்புகள்

## ஹரியாஞ முதல் மந்திரி தெரிவிக்கும் நம்பிக்கை

புதுடில்லி, ஏப். 10 மத்திய அரசாங்கத்துக்கும் ராஜ்ய அரசாங்கங்களுக்குமிடையேயான தொடர்புகள்பற்றிக்கவலைப்பட எதுவுமில்லையென ஹரியாஞ முதல்மந்திரி திரு. பிரேந்திரசிங் இங்கு கூறியுள்ளார்.

ஜனநாயக முறையில் சில ராஜ்யங்களில் அதிகாரத்துக்கு வந்துள்ளகாங்கிரஸல்லாத மந்திரி சபைகளுக்கு மத்திய அரசாங்கம் ஒத்துழைப்பு அளிக்க முன்வந்துள்ளது என்பதைத் தாம் உணர்வதாக திரு. பிரேந்திரசிங் மேலும் தெரிவித்தார். அதேமாதிரி மத்திய அரசாங்கத்துடன் சிரமமெதுவுமின்றி ஒத்துழைக்க காங்கிரஸல்லாத ராஜ்யங்களும் விருப்பம் காட்டுவதாகவும் அவர் கூறினர்.

### இரவு விருந்து

நேற்றிரவு புதுடில்லியில் காங்கிரஸல்லாத முதல் மந்திரிகள் ஓர் இராப்போசன விருந்தில் கலந்துகொண்டனர். ஒரிஸா முதல்மந்திரி தவிர, ஏனைய முதல்மந்திரிகள் அனைவரும் இவ்விருந்துக்குச் சமுகமளித்தனர். இவ்விருந்தில் கலந்து கொண்டபின்னரே, திரு. பிரேந்திரசிங் மேற்கூறிய கருத்துக்களை வெளியிட்டார்.

சில முதல் மந்திரிகள் திருமதி இந்திரா காந்தியைத் தனித்தனியே சந்தித்து, தமது ராஜ்யங்களில் நிலவும் சில விசேஷ பிரனைகள் பற்றிக் கலந்தாலோசித்ததாகவும் தெரிகிறது.

### அடுத்த சந்திப்பு

காங்கிரஸல்லாத முதல் மந்திரிகளின் சந்திப்புக்கள் அடிக்கடி நடைபெறவேண்டும் எனவும், அவற்றைத் தமது ராஜ்யங்களில் நடாத்தவேண்டுமெனவும் சில முதல்மந்திரிகள் நேற்றைய இரவுச்சந்திப்பில் யோசனை தெரிவித்தனர். தமிழ்நாட்டு, கேரள முதல் மந்திரிகளான திரு. சி. என். அண்ணுதுரையும், திரு. ஈ. எம், எஸ். நம்பூதிரிபாத்தும் தமது ராஜ்யங்களிலேயே அடுத்த சந்திப்பு நிகழவேண்டுனெக் கேட்டுக் கொண்டார்களெனத் தெரிகிறது.

அடுத்த சந்திப்பு சென்னையிலே நடைபெறுமென ஹரியாஞ முதல்மந்திரி திரு. பிரேந்திரசிங் அறிவித்தார்.

க்ராஜ்யங்களிடையேயான ஒத்துழைப்பு பற்றியும்முதல் மந்திரிகள் பேச்சுவார்த்தைகள் நடாத்தினர்.

## 'பாஸ்போர்ட் மறுப்பது அநீதி'

புதுடில்லி, ஏப்ரல் 10 வெளிநாடுகளுக்கு பிரயாணம்செய்வது ஒரு இந்தியப் பிரஜையின் அடிப்படைஉரிமைகளில்ஒன்ருகுமெனவும், அவருக்குப் பாஸ்போர்ட் வழங்கமறுப்பது நியாயமாகாதென்றும் இந்திய [illegible] தீர்ப்பளித்துள்ளது.

## கம்யூனிஸ்ட்கட்சி கண்டனம்

யாழ்ப்பாணம், செவ். வல்வெட்டித்துறையில் நடைபெற்றுள்ள சம்பவங்கள் குறித்து பொலிஸாரையும், இராணுவத்தினரையும் கண்டித்து சீனசார்பு கம்யூனிஸ்கட்சியின் வடபிரதேச அமைப்பாளர் திரு. வி. ஏ. கந்தசாமி ஒரு அறிக்கையை விடுத்துள்ளார்.

## ஆலயத்தில் கலை நிகழ்ச்சி

சுழிபுரம், செவ்வாய் இன்று இரவு சுழிபுரம் காளுவன் வைரவர் கோவிலில் கலை நிகழ்ச்சிகளும் விடிஉற்காலை பொங்கல் பூசைகளும் நடைபெறும். பலி நிறுத்தம் ஏற்பட்டதை முன்னிட்டே இந்த நிகழ்ச்சிகள் நடைபெற ஏற்பாடாகியுள்ளன.

## தொழிலாளர் வேலை நிறுத்தம

நாவலப்பிட்டி, திங்கள் டிக்கோயா வணராஜா குரூப் பெரிய மாணிக்கவத்தையைச்சேர்ந்த637தொழிலாளர்கள் 24அம்ச கோரிக்கைகள் சம்பந்தமாக வேலை நிறுத்தம் செய்து வருகிருர்கள்.

ஓய்வுபெறும் தொழிலாளர்களுக்குப் பென்சன் போனஸ், கல்யாணமான பெண்களுக்கு தொழில்பதிவு சுகவீனமுற்ற நோயாளர்களை ஆஸ்பத்திரிக்கு இட்டுச்செல்லல், பிரசவ சகாயப் பணம் கொடுப்பதில் உள்ள காலதாமதம், வீட்டுநீர் வாசிசாலை, சலூன் கரபந்தாட்டத்திடல் வசதிகள் ஆகியன அவற்றில் முக்கிய கோரிக்கைகளாகும்.

# ஆலயவிஷயத்தில் தலையிடுகூடாதாம்

அளவெட்டி, திங்கள் "ஆலயப் பிரவேசத்திற்கு இந்தியாவை முன்மாதிரியாக எடுத்துக்காட்டுபவர்களின் அறியாமையை இங்குள்ளமக்கள் உணரும்காலம் வெகுதூரத்தில் இல்லை. காந்தியுடன் சுதந்திரப்போராட்டம் முதலிய நடவடிக்கையில்முன்னணியில் நின்று உழைத்த பெரியார் கே. எம் முன்ஷி கூட, பின்தனது தவறை உணர்ந்து பச்சாதாபப்படுவதையும் ஆலயப்பிரவேசம்செய்த மாநிலங்களில் ஆட்சிசெய்த அரசியல் கட்சிக்குஏற்பட்டநிலையும்அவர்களுக்குக்கிடைத்த தெய்வத் தண்டனையையும் இங்குள்ளவர்கள் விரைவில் உணர்ந்து விடுவார்கள்" என்று பிரம்மஸ்ரீ கு. பாலசுந்தரக்குருக்கள் அகிலஇலங்கை சைவாலய தர்மகர்த்தாக்கள் மகாநாட்டில் பேசுகையில் கூறினர்.

கீரிமலை சிவன்கோவில்மண்டபத்தில் பிரம்மஸ்ரீ சு. துரைச்சாமிக்குருக்கள் தலைமையில் நடைபெற்ற அகில இலங்கை சைவாலய தர்மகர்த்தாக்கள் மகாநாட்டில் பேசுகையிலேயே திரு. கு. பாலசுந்தரக்குருக்கள் மேற்கண்டவாறுசொன்னர்.

பதிவாக்காகிய வேதசிவாகமங்களை பிரமாண நூல்களாகக்கொண்டு கட்டப்பட்டும் நடாத்தப்பட்டும் பூசிக்கப்பட்டும் சேவிக்கப்பட்டும் வரும்புனிதஸ்தலங்களாகிய வைவாலயங்களிலே எத்தகைய திருத்தமும் சிற்றறிவினராகிய மக்கள் செய்ய முற்படுவது அடாது என்றும் அது எம்மை பழிபாவங்களுக்கு ஆழாக்குமென்றும்இந்து மாமன்றமோ அரசாங்கமோ சைவாலய விஷயத்தில் கைவைக்கக்கூடாதென்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## கம்யூனிஸ்ட் அங்கத்தவர் மீதான வழக்கு

யாழ்ப்பாணம், செவ். கம்யூனிஸ்ட் கட்சியின் யாழ்ப்பாண மாவட்ட கமிட்டித் தலைவர்களான கே. ஏ. சுப்பிரமணியம், வி. ஏ. கந்தசாமி, கணபதிப்பிள்ளை ஆகியோர் மீது பொலிஸாரால் தொடரப்பட்ட வழக்கு மல்லாகம் மாஜிஸ்திரேட் முன்னிலையில் இன்று விசாரணைசெய்யப்படும்.

## உணவு உற்பத்திக் குழு

கிளிநொச்சி, ஞாயிறு உணவு உற்பத்தி இயக்கத்தில் சிரத்தை காட்டும் உருத்திரபுரம், கிளிநொச்சி, இராமநாதபுரம் வாசிகளுக்கு எள்ளுக்காடு, கல்மடுப் பகுதியிலுள்ள காணிகள் வழங்கப்படவிருக்கின்றன. இதற்கான விண்ணப்பங்கள் இம்மாதம் 18ந்திகதிக்கு முன்னர் அனுப்பப்படவேண்டுமெனவும், ஒரு கமக்காரனுக்கு இரண்டு ஏக்கர் காணி வழங்கப்படுமெனவும் தெரியவருகிறது.

## வள்ளம் பறிமுதல்

முல்லைத்தீவு, திங்கள் முல்லைத்தீவுக்கடலில் சில தினங்களுக்கு முன்னர் மீன்பிடிக்கச்சென்றமீனவர்சிலர் ரூபா 400 பெறுமதியான வள்ளமொன்றைக் கண்டுபிடித்து தம்முடன் வைத்திருந்தனர். முல்லைத்தீவுசுங்க உத்தியோகஸ்தர் திரு. ஆர். அமரசிங்கம் மீனவர்களிடம் போய் குறித்த வள்ளத்தைப் பறிமுதல் செய்துள்ளார்.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலே வீதி 65-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1967-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 11-ந்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org